**இலங்கை பொறியியல் பேரவை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முறைமைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை பொறியியல் பேரவையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, போரவையின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பேரவையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முறைமைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முறைமைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முறைமைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பேரவை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி

இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பேரவையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பேரவைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பேரவையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பேரவையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பேரவையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- பேரவையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- பேரவையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த வருமானத்தின் வருமான வரியாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 401,257 ரொதகையும் உள்ளடங்களாக மீளாய்வாண்டின் வருமான வரியாக ரூபா 1,656,196 தொகை மீளாய்வாண்டின் ஒட்டுமொத்த வரிப் பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் மொத்த வரிக் கடப்பாடான ரூபா 1,730,278 தொகையில் ரூபா 1,329,020 ஆன தொகை செலுத்தப்பட்டு கணக்கு வைக்கப்பட்டுள்ளது. பின்னர் இனங்காணப்பட்ட ரூபா 401,257 ஆன தொகை 2021 ஆம் ஆண்டின் போது கணக்கு வைக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2021 ஆம் ஆண்டின் கணக்குகள் நிறைவு செய்யப்பட்டிருந்த காரணத்தால் ஆகும். | செலுத்த வேண்டிய வருமான வரி சரியாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |

### 1.5.2 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 சனவரி முதல் திசெம்பர் வரையிலும் தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு ரூபா 290,889 ஆன மேலதிக நேர மற்றும் நாட் சம்பளமாக அலுவலகத்திற்கு அறிக்கையிடாது வார இறுதியில் மேலதிக நேர பணியாற்றியதாக கருதி தவறாக செலுத்தப்பட்டிருந்தது. | 2021 சனவரி முதல் திசெம்பர் வரையிலும் தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட மேலதிக நேர மற்றும் நாட் சம்பளமாக ஆக்கபூர்வமான முறையில் தலைவரின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சம்பளம் மற்றும் படிகள் செலுத்துதல் அங்கீகரிக்கும் போது தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு மற்றும் PED **12** ஆம் இலக்க நல்லாளுகைக்கான கையேட்டின் 9.7 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 கணக்காய்வுக்கான சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பெற வேண்டிய அங்கத்துவக் கட்டணங்கள் ரூபா 642,000 உள்ளடக்கப்பட்ட ரூபா 18,127,000 ஆன அங்கததுவக் கட்டணமொன்ற வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இதன் அங்கத்துவப் பணத்தை கணிப்பிடுவதற்கு அடிப்படையாக அமைந்த அங்கத்துவ பதிவேடு கணக்காய்வுக்கு முன்வைக்கப்படவில்லை. இதன் காரணமாக இந்த அங்கத்துவக் கட்டண வருமானத்தின் சரியானதன்மை தொடர்பில கணக்காய்வில் பரிசோதிக்க முடியாதிருந்தது. | இலங்கை பொறியியல் நிறுவகத்தின் (IESL) மற்றும் இலங்கை கூட்டிணைக்கப்பட்ட பொறியியல் நிறுவகத்தின் (IIESL) அங்கத்தவர்கள் தொடர்பான முழுமையான விபரத்தினை எமது நிறுவனத்திற்கு வழங்குவதற்கு அவர்களுக்கு சட்ட ரீதியான கடப்பாடொன்று இல்லை. இதன் காரணமாக அவர்களின் அங்கத்தவர்கள் தொடர்பான தகவல் எம்மிடம் இல்லை. | அங்கத்துவ பண வருமானம் அட்டுறு அடிப்படையில் இனங்காணப்பட வேண்டியதுடன், அந்த வருமானத்தை சான்றுறுதிப்படுத்த தேவையான தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.6. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 39.2 ஆம் பிரிவு | 2020 ஆம் ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விரிவான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் 03 மாதங்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், சபையினால் அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | 2017 இன் 04 ஆம் இலக்க இலங்கை பொறியியல் பேரவைச் சட்டத்தின் 12 ஆம் பந்தி | பொறியியல் தொழிலில் உள்ளோரின் தொழிலை தவறாக பயன்படுத்துவதற்குரிய ஏதாவது விடயங்கள் தொடர்பாக விசாரணை நடாத்த வேண்டியிருந்த போதிலும் பொறியியல் தொழிலில் ஈடுபடுகின்றவர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற தவறுகளை ஒழுங்குபடுத்துவதற்காக இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொறியியல் தொழிலில் உள்ளோரின் தொழிலை தவறான நடத்தை தொடர்பில் விசாரணை நடாத்துவதற்கு தேவையான நடைமுறைகள் தற்போது நிறைவு செய்யப்பட்டவாறு உள்ளது. அது தொடர்பில் ஏதேனும் முறைப்பாடொன்று கிடைக்கும் போது உரிய நடவடிக்கை எடுப்பதற்கு கூடிய விரைவில் இயலுமானதாக இருக்கும். இது தொடர்பில் பொது மக்களுக்கு அறிவிப்பதற்கு எதிர்பார்க்கின்றேன். | பொறியியல் சபைய அதிகாரச்சட்டத்தின்ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2017 இன் 04 ஆம் இலக்க இலங்கை பொறியியல் பேரவைச் சட்டத்தின் 14 ஆம் பந்தியின் 15 மற்றும் 18 ஆம் பிரிவுகள் | பொறியியல் தொழிலில் ஈடுபடுபவராக பதிவு செய்திருந்தால் மாத்திரமன்று, பொறியியலாளர் பொறியியல் தொழிலுடன் தொடர்புடைய பணிகளில் ஈடுபடக்கூடாது. எவ்வாறான போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக பொறியியளாலர்களின் நிறுவனத்தின் (IIESL) மற்றும் இலங்கை கூட்டிணைக்கப்பட்ட பொறியியல் நிறுவனம் (IIESL) ஆகியவற்றின் தொழில்வல்லுநர்கள் முறையே 20,248 மற்றும் 8,000 ஆன போதிலும், பொறியியல் | பதிவு செய்யாது பொறியியல் துறைசார் பணிகளில் ஈடுபடும் நபர்களை இனங்காணுவதற்கும் இயலுமான வகையில் பொறிமுறையொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. இது உரிய முறையில மேற்கொள்ளப்படவில்லை எனின், சமூகத்திற்கு பாதகமான தாக்கங்கள் ஏற்படக்கூடும்.அதற்கு காரணமாக அமைவது பொறியியல் பேரவைச் சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்தல் IESL மற்றும் IIESL நிறுவனங்களின் அங்கத்துவம் வழங்குவதில் தங்கியுள்ளது. சில பொறியியல் வல்லுநர்கள் அந்த நிறுவனங்களில் அங்கத்துவம் பெறுவதில் நடைமுறைச் சிக்கல்கள் | பொறியியல் சபைய அதிகாரச்சட்டத்தின்ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பேரவையில் 18,127 பேர் மாத்திரம் பதிவு செய்திருந்ததுடன், அது தொடர்பில் தொடர்புடைய தரப்பினரை அறிவுறுத்துவதற்கு மற்றும் அபதிவு செய்யாது பொறியியல் துறைசார் பணிகளில் ஈடுபடும் நபர்களை இனங்காணுவதற்கும் இயலுமான வகையில் பொறிமுறையொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இருப்பதாக எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக IESL மற்றும் IIESL நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது | |
| (ஈ) | 2017 இன் 04 ஆம் இலக்க இலங்கை பொறியியல் பேரவைச் சட்டத்தின் அதிகாரங்கள் (ஐ) பிரிவு | பொறியியல் நிபுணர்களின் தொழில் முறைகேடுகள் தொடர்பாக ஒழுக்காற்று விசாரணைகளை நடத்துவதற்கான நடைமுறை குறித்து பொறியியல் பேரவை முடிவு செய்ய வேண்டும் என்றாலும், அந்த நடைமுறைகள் தீர்மானிக்கப்படவில்லை. | பொறியியல் வல்லுனர்களின் தொழில் முறைகேடுகள் தொடர்பாக ஒழுக்காற்று விசாரணைகளை நடத்துவதற்கான நடைமுறை தற்போது நிறைவடைந்துள்ளது. தற்போது, ஒழுக்காற்று நடைமுறை ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டு, அது சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது. | பொறியியல் சபைய அதிகாரச்சட்டத்தின்ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

-----------------------------

### 2.1 நிதி விளைவுகள்

----------------------------------

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 10,550,000 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 8,954,000 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,596,000 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு சபையின் செலவினம் அதிகரித்தமைக்கு ஒப்பாக பதிவுக் கட்டண வருமானம் மற்றும் திறைசேரி நிதியேற்பாடுகளின் அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பொறியியல் பேரவையின் கணக்கு நடடவடிக்கைகளுக்காக கணக்காளர் (பகுதி நேர அடிப்படையில்) மாதம் ரூபா 26,000 படியாக ரூபா 312,000 செலுத்தப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், வங்கி இணக்கக்கூற்று, பேரேட்டுப் பதிவுகள், தேய்மானம் கணக்கீடு, நிலையான வைப்புத்தொகைக்கான வட்டி கணக்கீடு, காசோலைகளின் கணக்கு போன்றவற்றிற்காக மற்றொரு தரப்பினருக்கு ரூபா 35,000 செலுத்தப்பட்டிருந்தது. | பொறியியல் பேரவையின் கணக்கீட்டு பணிகளுக்கு IESL இன் Quick Book மென்பொருள் பயன்படுத்தப்படும். மென்பொருளின் அனுபவம் வாய்ந்த பயனர் ஒருவர் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டு முழுவதும் செய்யப்பட்ட கணக்குகளை மென்பொருளில் உள்ளிட வேண்டும். அந்த நோக்கத்திற்காக, IESL நிறுவனத்தில் அனைத்து பணிகளுக்கும் பொருத்தமான ஊழியர் ஒருவரின் ஊடாக Quick Book மென்பொருளில் கணக்குகள் உள்ளீடு செய்யப்பட்டு, அதற்கான கொடுப்பனவு (ரூபா 35,000) செய்யப்பட்டது. எனினும் தற்போது சபைக்கான Quick Book மென்பொருளை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன | கணக்காளரின் விடயப்பரப்பிற்கு உள்ளான பணிக்காக மேலதின் செலவினம் மேற்கொள்ளப்படக் கூடாது. |